மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பில் தமிழ்ப்பற்று

# A View on Tamilism in The Collection of Traditional Poems Poontazhal

சாலினி ராஜேந்திரன்/ Shalini Rajandren[1]
[1]Master Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: shalinirajandren00@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பூந்தழல் எனும் மரபு கவிதைத் தொகுப்பில் காணப்படும் தமிழ்ப்பற்றுக் குறித்ததொரு பார்வை கண்டறிவதே, இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்தப் பூந்தழல் எனும் மரபு கவிதைத் தொகுப்பில் மொழி குறித்துச் சுமார் 18 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கவிஞர் தமிழ்ப்பற்றை உணர்த்தும் வகையில் கவிதைகளைப் படைத்துள்ளார் என்பதை நன்கு அறிய முடிகின்றது. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்குப் பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பே முதல் நிலை தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கவிதைகளில் தமிழ்ப்பற்றையும் சிறப்பையும் மிகவும் அழகாகவும் செம்மையாகவும் கவிஞரால் பல இடங்களில் எழுதப்பட்டுள்ளது. கவிஞர் பல இடத்தில் தமிழ்ப்பற்றை உணர்த்தும் வண்ணம் கவிதை புனைந்துள்ளார் என்பதை இந்த ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

**கருச்சொற்கள்:** பூந்தழல், மரபு கவிதை, தமிழ்ப்பற்றுக் குறித்த பார்வை

**Abstract**

The aim of this study is to find a view of the Tamil influence found in the collection of traditional poetry Poontzhal. There are about 18 poems on language in this collection of traditional poetry called Poontzhal. It is well known that the poet has composed poems to express the Tamil language. This study has been handled in qualitative approach. For this study, Poontzhal traditional poetry collection has been used as primary data. In these poems, the Tamil language and excellence are very beautifully and elegantly written by the poet in many places. Through this study, it is possible to know that the poet has composed poems in many places to convey the feeling of Tamilness.

**Keywords:** Poonthazhal, Traditional Poem, Tamilism

**முன்னுரை**

பூந்தழல் எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பு, கவிஞர் மு. ஆசைத்தம்பி (ஆவலன்) அவர்களால் எழுதப்பட்டதாகும். எட்டுத் தலைப்புகளைக் கொண்டுள்ள இக்கவிதைத் தொகுப்பில் மொத்தம் 18 கவிதைகள் மொழி குறித்து உள்ளன. அவ்வகையில் இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் மொழி எனும் கருப்பொருளில் எழுதப்பட்ட கவிதைகளில் தமிழ்ப்பற்றுக் குறித்த பதிவுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தரவுப் பகுப்பாய்வு**

**தமிழ்ப்பள்ளியின் நிலை**

இக்கவிதைத் தொகுப்பில் கவிஞர் இன்று நடைமுறையில் நடந்து வரும் செய்தியைத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார். பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பாத காரணத்தால் இன்று நம் நாட்டில் தமிழ்ப்பள்ளிகளின் நிலை ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது. எத்தனை பள்ளி இயங்கும் எத்தனை பள்ளி மூடப்படும் என்று அறியாத நிலையில் நாம் உள்ளோம் என்பதை அனைவரும் உணர்ந்தாக வேண்டும். தமிழ்ப்பற்றுடைய கவிஞர் அந்நிலவரத்தை,

துள்ளித் திரியும் பிள்ளைகட்குத் - தமிழ்
சொல்லிக் கொடுக்கும் பள்ளிகளைப்
புள்ளி வைத்து மூடுவராம்! - அதைப்
பொறுத் திருந்து பார்ப்போமோ? (பக்கம் 14)

தம் கவிதையில் காட்டியுள்ளார். நமக்காக உருவாக்கப்பட்ட பள்ளியை நாமே மூடிவைக்க வழிவகுக்கக் கூடாது. மும்மொழிக்கும் உரிமை பெற்றிருக்கும் நம் நாட்டில் இப்படி ஒன்று நடந்தால், அனைவரும் ஒன்றிணைந்து போராடியே ஆக வேண்டும். தமிழ்ப்பள்ளிகள் இங்கு மூடுவதற்குக் குறைவான மாணவர் எண்ணிக்கையே காரணம். போதுமான மாணவர்கள் பள்ளியில் இல்லாத காரணத்தினால் தமிழ்ப்பள்ளிகள் மூடவேண்டும் என்ற முடிவை எடுக்கின்றனர். ஆக, நம் இனத்துக்காக ஒதுக்கப்பட்ட பள்ளியை உரிமையுடன் கேட்டு வாங்குவதே சிறப்பு.

**தமிழைக் காக்க தமிழன் எழவேண்டும்**

தமிழ் மீது அதிகப் பற்றுடையவன் தமிழுக்கென எது நேர்ந்தாலும் விட்டுக்கொடுக்காமல் தன் கடமையைச் செய்வான் என்பதைக் கவிஞர் புனைந்த கவிதைகளில் காண முடிந்தது. உயிரைவிட மேலாகக் கருதப்படும் தாய்த்தமிழுக்கு ஏதேனும் நேர்ந்தால் பொங்கி எழும் இனம் என் இனம் என்பதைக் கருத்தில் கொண்டு கவிஞர்,

உயிரை விடவும் மேலாக-நமது
உதிரம் கலந்த தாய்த்தமிழைப்
பயிராய் வளர்க்கும் பள்ளிகளை-மூடப்
பார்த்திருக்கக் கடவோமோ? (பக்கம் 14)

என்று கவிவடித்துள்ளார்.

**தமிழ்ப்பள்ளியே நம் தேர்வு**

தமிழனாகப் பிறந்து தமிழ் கற்று மடிவோம் எனப் பிறர் சொல்ல கேட்கும் ஒவ்வொருவரும் தமிழுக்கும் தமிழ்ப்பள்ளிக்கும் முன்னுரிமை கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் நம் தமிழ்ப்பள்ளி மூட வேண்டும் எனும் கருத்து நிலவி இருந்திருக்காது அல்லவா? இருந்தாலுங்கூடக் கவிஞர் தம் கவிதையின் வழி பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவோம் எனப் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார். காட்டாக,

தப்பாது பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளி அனுப்பிடுவீர்?
அப்போது தாந்தமிழின் அடையாளம் இங்கிருக்கும்! (பக்கம் 12)

மேலும், செம்மொழியான தமிழ்மொழி உணர்வு பொங்கவும் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்ப அறிவுரை கூறுகிறார் கவிஞர். இதனையே,

தாய்மொழிப் பள்ளிக்(கு)இன்றே
தளிர்களை விடுப்பீர் நன்றே! (பக்கம் 9)

எனத் ‘தமிழனுக்கு ஒரு சொல்’ எனும் கவிதையில் வலியுறுத்தியுள்ளார்.

**தமிழுக்கு முன்னுரிமை**

“செந்தமிழ் மூன்றும் நான் நான் நான்" எனப் பாரதிதாசன் கூறக் கேட்டிருப்போம். அவ்வகையில் முத்தமிழ்க் கல்வியான தமிழ்மொழிக்கு முதன்மை கொடுக்காமல் இருந்தால் யார்தான் அவ்விடத்தை நிரப்புவார்கள்?இதனையே கவிஞர் ஆசைத்தம்பி,

முத்தமிழ் கல்விக்(கு) இங்கு
முதன்மைசெய் யாது போனால்,
சொத்தென நமக்கி ருக்கும்
சொற்றமிழ்ப் பள்ளி எல்லாம்
தத்தெடுப் பார்கள் இன்றித்
தடயமில் லாது போகும்! (பக்கம் 9)

எனும் வரிகளில் வழி தெளிவுபடுத்துகிறார்.

**தமிழ்த்தொண்டு செய்வோம்**

தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாதல் இல்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டா ?(பாரதிதாசன்)

என்பது பாரதிதாசனின் கவிதை வரி. தமிழ்த் தொண்டர்க்கும், தமிழ் கற்றார்க்கும் நிலைப்பேறு உண்டு என்கிறார். அதேபோலக் கவிஞர் ஆசைத்தம்பி தமிழ்ப்பணி செய்வாரைக் கீழ்க்காணுமாறு புகழ்ந்து பேசுகிறார்.

"தமிழ்ப்பணி ஆற்றிடும் தொண்டரைப் புகழ்வேன்"! (பக்கம் 13)

மேலும், தமிழின் மீது அதீத அன்பும் பற்றினாலும் கவிஞர்,

ஆருயிர் உளவரை தமிழுக்கே உழைப்பேன்! (பக்கம் 13)

என்பதையும் தம் கவிதை வரிகளில் அழகாகச் செதுக்கியுள்ளார்.

**தமிழ்ச்சொற்களில் பேசுவோம்**

நல்ல தமிழ்ச்சொற்கள் இருக்கும்போது ஏன் நாம் அதனைப் பயன்படுத்துவதில்லை? அதிலும் சிலர் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் அச்சொல் பயன்பாட்டில் இல்லை எனத் தெரிந்தும் இன்னும் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். தமிழில் பல சொற்கள் கடல் போல் படர்ந்து கிடக்கின்றன; ஆனால் யாரும் அதனை நாடிப் பயன்படுத்துவதில்லையே என்பது கவலைக்கிடமாக உள்ளது. இதனையே கவிஞர் உதாரணத்துடன் தம் கவிதை வரியில் குறிப்பிட்டுள்ளார்.

சுழியமென் றொருசொல் உண்டு;
சுடர்தமிழ் அதுவென் றாலும்,
மொழிந்திட ஆர்வம் காட்டார்! (பக்கம் 9)

சுழியம் என்பது தூயதமிழ்ச் சொல் ஆனாலும், அதனைப் பயன்பாட்டில் கொள்ளவில்லை என்பது கவிஞரின் ஆதங்கம்.

நற்றமிழ்ச் சொல்லிருக்க
நடைமுறைத் தமிழிருக்க
மற்றவர் சொல்லெதற்கு?
மறைந்திடும் தமிழ்வழக்கு! (பக்கம் 8)

தொடர்ந்து, தமிழை நற்றமிழ் எனச் சொல்லக் கேட்டிருப்போம். நற்றமிழ் எனப் புகழ்பெற்றிருக்கும் நம் மொழி இருக்க ஏன் இங்கு அயல் மொழி பயன்பாடு உலா வருகின்றது? இம்மாதிரியான சூழ்நிலைகளில் நம் மொழி ஓங்கி நிற்க வேண்டிய இடத்தில் பிற மொழி கொடிகட்டி பறக்கின்றது. இதனை நாம் வினவினால் நவீனக் காலத்தைக் குறை கூறும் கூட்டங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும். இத்தகைய செயல்களினால் தமிழ் வழக்கு மறைந்து கொண்டே போகின்றது என்பதை உணர்ந்தே இந்த வரியை வருத்தத்துடன் எழுதியுள்ளார்.

**தமிழ் கற்பதைக் கடமையாக்குவோம்**

ஒருவர் பிறமொழி கற்பது தவறன்று. பிறமொழி கற்பதனால் பல நன்மைகளைப் பெறலாம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், தாய்மொழி கற்பதைக் கடமையாகக் கருதினால் நம் மொழிக்கு அழிவில்லை என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும். பிறமொழிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தமிழ்மொழிக்கும் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் கவிஞர்,

> பிறமொழி கற்ப தெல்லாம்
> பிழைப்பதற்(கு) என்ற போதும்,
> அறமொழி தமிழும் கற்றல்
> அனைவரின் கடமை ஆக்கின்! (பக்கம் 8)

எனப் படைத்துள்ளார். தமிழ் சோறு போடுமா? என இங்குப் பலரும் வினவி வரும் நிலையில்; தமிழ் கற்பதைக் கடமையாக்கினால் நிச்சயம் சோறு கிடைக்கும் என்பதைக் கவிஞரின் வரிகள் சான்று பகர்கின்றன.

**நிறைவுரை**

கவிஞர் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பதைத் தம் கவிதையில் அவர் தமிழுக்குக் கொடுத்த முன்னுரிமையையும் அவசியத்தையும் கொண்டு அறிய இயலுகிறது. அதோடு, கவிஞர் இன்றைய நம் தமிழ்மொழியின் நிலை குறித்தும் கவிதை வரிகளில் தெரிவுபடுத்தியிருந்தார். தாய்மொழிக்குக் கொடுக்காத மரியாதையும் அக்கறையும் வேறு எங்குச் செலுத்தினாலும் அது மிகையாகாது என்பதைக் கவிஞர் தெளிவாகப் புரியும் வண்ணம் கவிவடித்துள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

ஆசைத்தம்பி, மு. (2021). பூந்தழல் தமிழ்க்கவிதைத் தொகுப்பு. உமா பதிப்பகம். கோலாலும்பூர்.